பெரியாழ்வார் அருளிச் செய்த
பெரியாழ்வார் திருமொழி
மூன்றாம் பத்து

ஆறாம் திருமொழி - நாவலம்
கண்ணன் புல்லாங்குழல் ஊதற் சிறப்பு

** நாவலம் பெரிய தீவினில் வாழும் *
நங்கைமீர்கள்! இதோர் அற்புதம் கேளீர் *
தூ வலம்புரி உடைய திருமால் *
தூய வாயில் குழல் ஓசை வழியே **
கோவலர் சிறுமியர் இளங்கொங்கை
குதுகலிப்ப * உடல் உள் அவிழ்ந்து * எங்கும்
காவலும் கடந்து கயிறு மாலையாகி *
வந்து கவிழ்ந்து நின்றனரே 1

இடவணரை இடத் தோளொடு சாய்த்து *
இரு கை கூடப் புருவம் நெரிந்தேற *
குட வயிறு பட வாய் கடை கூடக் *
கோவிந்தன் குழல் கொடு ஊதின போது **
மட மயில்களொடு மான் பிணை போலே *
மங்கைமார்கள் மலர்க் கூந்தல் அவிழ *
உடை நெகிழ ஓர் கையால் துகில் பற்றி *
ஒல்கி ஓடரிக்கண் ஓட நின்றனரே 2

வான் இளவரசு வைகுந்தக் குட்டன் *
வாசுதேவன் மதுரை மன்னன் * நந்த
கோன் இளவரசு கோவலர் குட்டன் *
கோவிந்தன் குழல் கொடு ஊதின போது **
வான் இளம்படியர் வந்து வந்தீண்டி *
மனம் உருகி மலர்க் கண்கள் பனிப்ப *
தேன் அளவு செறி கூந்தல் அவிழச் *
சென்னி வேர்ப்பச் செவி சேர்த்து நின்றனரே 3

தேனுகன் பிலம்பன் காளியன் என்னும் *
தீப்பப் பூடுகள் அடங்க உழக்கி *
கானகம்படி உலாவி உலாவிக் *
கருஞ்சிறுக்கன் குழல் ஊதின போது **
மேனகையொடு திலோத்தமை அரம்பை *
உருப்பசி அரவர் வெள்கி மயங்கி *
வானகம்படியில் வாய் திறப்பின்றி *
ஆடல் பாடல் அவை மாறினர் தாமே 4

முன்னரசிங்கம் அதாகி அவுணன்
முக்கியத்தை முடிப்பான் * மூவுலகில்
மன்னர் அஞ்சும் * மதுசூதனன் வாயில்
குழலின் ஓசை * செவியைப் பற்றி வாங்க **
நன்னரம்புடைய தும்புருவோடு *
நாரதனும் தம் தம் வீணை மறந்து *
கின்னர மிதுனங்களும் தம் தம்
கின்னரம் * தொடுகிலோம் என்றனரே 5

செம்பெரும் தடங்கண்ணன் திரள் தோளன் *
தேவகி சிறுவன் தேவர்கள் சிங்கம் *
நம் பரமன் இந்நாள் குழல் ஊதக்
கேட்டவர்கள் * இடர் உற்றன கேளீர் **
அம்பரம் திரியும் காந்தப்பர் எல்லாம் *
அமுத கீத வலையால் சுருக்குண்டு *
நம் பரம் அன்றென்று நாணி மயங்கி *
நைந்து சோர்ந்து கைம்மறித்து நின்றனரே 6

புவியுள் நான் கண்டதோர் அற்புதம் கேளீர் *
பூணி மேய்க்கும் இளங்கோவலர் கூட்டத்
தவையுள் * நாகத்தணையான் குழல் ஊத *
அமர லோகத்தளவும் சென்று இசைப்ப **
அவி உணா மறந்து வானவர் எல்லாம் *
ஆயர்பாடி நிறையப் புகுந்து ஈண்டி *
செவியுள் நாவின் சுவை கொண்டு மகிழ்ந்து *
கோவிந்தனைத் தொடர்ந்து என்றும் விடாரே 7

சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச் *
செங்கண் கோடச் செய்ய வாய் கொப்பளிப்ப *
குறுவெயர்ப் புருவம் கூடலிப்பக் *
கோவிந்தன் குழல் கொடு ஊதின போது **
பறவையின் கணங்கள் கூடு துறந்து *
வந்து சூழ்ந்து படுகாடு கிடப்ப *
கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டுக் *
கவிழ்ந்து இறங்கிச் செவி ஆட்டகில்லாவே 8

திரண்டெழு தழை மழை முகில்வண்ணன் *
செங்கமல மலர் சூழ் வண்டினம் போலே *
சுருண்டிருண்ட குழல் தாழ்ந்த முகத்தான் *
ஊதுகின்ற குழல் ஓசை வழியே **
மருண்டு மான் கணங்கள் மேய்கை மறந்து *
மேய்ந்த புல்லும் கடைவாய் வழி சோர *
இரண்டு பாடும் துலங்காப் புடை பெயரா *
எழுது சித்திரங்கள் போல நின்றனவே 9

கருங்கண் தோகை மயில் பீலி அணிந்து *
கட்டி நன்குடுத்த பீதகவாடை *
அருங்கல உருவின் ஆயர் பெருமான் *
அவன் ஒருவன் குழல் ஊதின போது **
மரங்கள் நின்று மது தாரைகள் பாயும் *
மலர்கள் வீழும் வளர் கொம்புகள் தாழும் *
இரங்கும் கூம்பும் திருமால் நின்ற நின்ற
பக்கம் நோக்கி * அவை செய்யும் குணமே 10

** குழல் இருண்டு சுருண்டேறிய குஞ்சிக் *
கோவிந்தனுடைய கோமள வாயில் *
குழல் முழஞ்சுகளினூடு குமிழ்த்துக் *
கொழித்திழிந்த அமுதப் புனல் தன்னை **
குழல் முழவம் விளம்பும் புதுவைக் கோன் *
விட்டுசித்தன் விரித்த தமிழ் வல்லார் *
குழலை வென்ற குளிர் வாயினராகிச் *
சாது கோட்டியுள் கொள்ளப்படுவாரே 11

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்